முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1392

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.07.2023, சனிக்கிழமை

1. ஞானத்தின் சக்தியாய் கலியுகத்தில்
ஞானிகளை படைக்க அவதரித்த
ஞானதேசிகனே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
நாட்டிடுவேன் சோபகிருது ஆடித் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 06 ம் நாள், 22.07.2023, சனிக்கிழமை)
நேசமுடன் அரங்கன் சக்திபலம்
நிலவுலகில் இன்னும் பெருகவேண்டி
3. வாசி நடத்தி சுப்ரமணியர் யானும்
வாசம் செய்கின்றேன் அரங்கனோடு சூட்சுமமாய்
சூட்சுமமாய் மகா சக்திகளை
சுப்ரமணியர் யானும் அரங்கன்பால் தொடர்பு கூட்டி
4. மாட்சிமைபட என்றும் அரங்கன் சிரஞ்சீவியாக
மண்ணுலகில் ஞானியாய் வாழ
ஆற்றல்பட மக்களை நோக்கி அற்புதம் நடத்த
அருளிவருகின்றேன் அனுதினமும் வரம் தன்னை
5. வரம்பெற்று அரங்கன் சக்திகூடி
வாழும் காலம் தன்நோக்கம் யாவும் பூர்த்தி செய்து
தரமான தொண்டர்களை தரணியெல்லாம்
தக்கபடி உருவாக்கி அவர்களை ஞானிகளாக
6. ஆகவே மாற்றம் செய்து இனிதே
அகிலத்தில் சன்மார்க்க நெறிமுறையை
ஆற்றல்பட வளர்த்து உலகமெல்லாம்
ஆன்மீக ஞான அரசியல் களமாக

7. களமோடு எங்கும் ஞான ஆட்சி
கலியுகத்தில் தர்மவான்கள் புண்ணியவான்கள் இணைந்த
பெருமைமிக்க ஆட்சிமுறைகாலமாக
பிசகின்றி மாற்றி அரங்கன் தானும்
8. அரங்கன் தான் அற்புதத்தை நடத்த
ஆக்கமுடன் ஆறுமுகன் உடனிருக்கின்றேன்
வரங்கள் பெற உலகமக்களெல்லாம்
வணங்கிவரவேண்டும் அரங்கன் திருவடி நோக்கி
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–